

# தலைவர் கலைஞரின்

# ஆகஸ்ட் 7 நவம்பர் 7

ஆகஸ்ட் 7 நவம்பர் 7

# தலைவர் கலைஞர்

ஆய்வக நூலகம் சென்னை-18.

தலைமைக் கழக வெளியீடு :
திராவிட முன்னேற்றக் கழகம்
''அண்ணா அறிவாலயம்'' சென்னை-600 018.

1990 நவம்பர்

விலை : ரூ. 2-50

அச்சிட்டோர் :

நியு ரெட்சன் பிரிண்டர்ஸ்
19/1 முசபர் ஜங் பகதூர் தெரு,
சென்னை-600 005. தொலைபேசி: 84 62 66

## இந்நூல் .....

இந்தியத் துணைக் கண்டத்தின் அரசியல் நாவாய் பிரச்சினைப் புயலில் சிக்கித் தடுமாறும் போதெல்லாம் தலைவர் கலைஞரும் தி.மு.கவும் அதன் கலங்கரை விளக்கமாய் பல காலங்களிலும் இருந்திருக்கிறார்கள். நினைவுத் திறன் குறைந்த வரலாற்று ஆசிரியர்களும், சில நேரங்களில் பயனடைந்த தலைவர்களும் கூட வசதியாய் இதனை மறந்துவிடுவார்கள்.

காங்கிரஸ் பெருந்தூண்களால் 1969-ல் எதிர்க்கப்பட்டு தனிமரமாகி நின்ற அம்மையார் இந்திராகாந்தியை ஆட்சியில் நிலைப் படுத்தவும், பின்னர் 1971-ல் மீண்டும் அரியணையில் உயர்த்தவும் கலைஞரின் துணையே காரணம். மீண்டும் 1977-ல் ஜனதா உருவாகவும் காங்கிரசை வீழ்த்தவும் தலைவர் கலைஞரின் தொண்டே துணையானது. வீழ்ந்த இந்திராகாந்தியார் "உயிர்த்து எழவும்" 1980-ல் கலைஞரின் ராஜதந்திரமும் உழைப்புமே பற்றுக் கோடானது அகில இந்திய அளவில் காங்கிரசுக்கு ஒரு மாற்று அணியை 1988-ல் தேசீய முன்னணி எனும் பெயரால் உருவாக்க தலைவர் கலைஞரின் தலைமையில் சென்னைதான் பாடி வீடானது.

இப்படி அகில இந்திய அரசியலுக்குத் தலைவர் கலைஞரின் பங்களிப்பும் உழைப்பும் மகத்தானது.

திராவிட இயக்கத்தின் மூத்த தொண்ட ரான தலைவரவர்கள் இன்றும் இயக்கத்தின் கருத்துக்களை 'புதுக்கருக்கு அழியாமல்' தமிழ கத்தில் காப்பதுடன் மத்திய அரசும் நிறை வேற்றிட்ட செய்தியினையும் அதை எதிர்க்கும் ஆதிக்க சக்திகளின் செயல்களையும் இதில் வரும் கடிதமும், பேச்சும் எழுச்சியுடன் காட்டுகின்றன. படியுங்கள்.

என். செல்வேந்திரன்
வெளியீட்டுச் செயலாளர் தி.மு.க.




உடன்பிறப்பே,

இறுதிவரையில் உறுதி குலையாமல் ''மதச்சார்பின்மை'' என்ற கேடயமும், ''மண்டல் கமிஷன் பரிந்துரை'' என்ற வாளும் தாங்கி, களத்தில் நின்ற வி. பி. சிங் அவர்கள் விழுப்புண் பெற்று புன்னகை தவழக் காட்சி தரும் மாட்சி கண்டு பெருமிதம் கொள்கிறேன்.

டெல்லி நாடாளுமன்றத்தில்; மாவீரன் சீசர் ரோமாபுரி செனட் சபையில் எந்த முறையில் சாய்க்கப்பட்டானோ அந்த முறையில் அவர் சாய்க்கப்பட்டார் என்ற செய்தி என் செவிக்கெட்டியவுடன் — வாலி வதைப்படலம் மீண்டும் டெல்லியில் வரலாறாக உருவெடுத்தது என்ற தகவல் என் இதயத்தைக் குலுக்கியவுடன் பி.டி.ஐ. நிருபர் என்னிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு எனது கருத்தினைக் கேட்டார். கட்டபொம்மன் சரித்திரத்தை அறிந்தவர் களாயிற்றே நாம்! உழுது போடப்பட்ட அவனது பாஞ் சாலங்குறிச்சிக் கோட்டையைப்போல மீண்டும் ஒரு கோட்டையெழுப்பி அதனைக் கண்குளிர, வீரம் மிளிரக் கண்டு களிப்பவராயிற்றே நாம்!

அதனால் பி. டி. ஐ நிருபரிடம் தொலைபேசியில் சொன்னேன் பின்வருமாறு !

"ஆகஸ்டு ஏழாம் தேதி வி.பி. சிங் அவர்கள் மண்டல் கமிஷன் பரிந்துரையை நிறைவேற்றப் போவதாக பாராளு மன்றத்தில் அறிவித்தார். அதற்கான விலையை இன்று நவம்பர் ஏழாம் தேதி பாராளுமன்றத்தில் கொடுத்துவிட்டார் எலியாக உயிர் வாழ்வதைவிடப் புலியாகச் சாவதே பெருமை என்று எண்ணுகிறவன் நான். எனவே அவரது கொள்கை உறுதியைப் பாராட்டுகிறேன்."

பி.டி.ஐ. நிருபரிடம் தொலைபேசியில் அப்படிச் சொன்னதே; நவம்பர் 7ந் தேதி பற்றிய எனது அறிக்கை ஆயிற்று ! அந்த அறிக்கையை மைய இழையாகக் கொண்டு தான் இந்தக் கடிதம் உனக்கு !

பத்தாண்டு காலமாக காங்கிரஸ் ஆட்சியில் இந்திரா காந்தி அம்மையார் அவர்களாலும், ராஜீவ் காந்தி அவர் களாலும், "தீண்டினால் திருநீலகண்டம்" என மொழிந்து எங்கோ ஒரு மூலையில் முடக்கிப் போடப்பட்ட மண்டல் கமிஷன் பரிந்துரைகளை எடுத்துத் தூசு தட்டி, அதனை இந்த அரசு நிறைவேற்றும் என வி.பி. சிங் அவர்கள் அறிவித்ததுதான் மகாமகாப் பாதகமாகப் போயிற்று ! சிலர் வாழப் பலர் வாடவேண்டுமாம் ! அந்தச் சிக்கலை அறுத்தால் சிலருக்குச் சினம் பொங்குமாம் ! சாதிகள் ஆயிரம் வகுப்பார் களாம் — அந்தச் சனியனைத் தமக்குத் துணையாகக் கொள்வார்களாம் ! ஆனால் அந்தச் சாதியினர் சமூக ரீதியில் கல்வியில், அரசுப்பணியில் வாய்ப்பற்றுக் கிடந்து சாகிறோமே; இது சரியா ? முறையா ? எனக் கேட்டு எமக்கென வாய்ப் பளித்துக் கைதூக்கிவிட இட ஒதுக்கீடு செய்திடுக எனக் குரல் கொடுத்து; அந்தக் குரலை மதித்து ஒரு நாட்டின் பிரதமர்

செயல்படத் தொடங்கினால் — "ஆகா! சாதிப்பிரச் சினையைக் கிளப்புகிறாரே!" என்று சல்லடம் கட்டிப் புறப்படுவார்களாம்! வன்முறையைத் தூண்டுவார்களாம்!

பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்கள் பழைய நிலையில் இருக்கவில்லை; உண்மைகளை உணரத் தலைப் பட்டு விட்டனர் என்றதும் — அந்த மக்களையும் அடக்கி யுள்ள இந்து மத வெறியைத் தூண்டிச் சிறுபான்மை மக்களுடன் மோதிட-இந்திய பூமியில் இரத்தஆறு பெருகிட இராமனைத் தூக்கிக்கொண்டு ஆடுவார்களாம்!

அதற்கென அத்வானி இரத யாத்திரை! அந்த யாத் திரையின் பின்னணி மண்டல் கமிஷன் எதிர்ப்பு! பிரச்சார அணியோ; இராமர் கோயில் கட்டுவோம் பாபர் மசூதியை இடித்துவிட்டு என்பதாகும்!

தடுத்தால் ஆட்சிக்குத் தந்துள்ள ஆதரவைத் திரும்பப் பெறுவோம் என மிரட்டல்!

"இராமர் கோயிலை அயோத்தியில் கட்டிக் கொள் ளுங்கள் — அதற்காக பாபர் மசூதியை இடிப்பதை அனுமதிக்க முடியாது!" இதுதான் வி.பி. சிங் அளித்த விளக்கம். இரத யாத்திரை எல்லை தாண்டத் தொடங்கியது. அது தடுக்கப்பட்டது. ஆதரவு திரும்பப் பெறப்பட்டது. "அய்யோ! ஆதரவை திரும்பப் பெறாதீர்கள்! நீங்கள் பாபர் மசூதியை மட்டுமல்ல, உங்கள் சாமியார் ஒருவர் அறை கூவல் விட்டிருப்பது போல தாஜ்மகாலையும் கூட தகர்த் தெறியுங்கள்!" என்று வி.பி. சிங் சிறிது விழி அசைத்திருந்தால் அசைந்திருக்காது அவரது ஆட்சி!

அல்லது ராஜீவ் காந்தியும் அவரது ஆதரவைப் பெறுகிற வர்களும் மண்டல் கமிஷனை மறைமுகமாக எதிர்ப்பதற்குத்

தலைவணங்கி; அதற்கான நடவடிக்கைகளை வி.பி. சிங் விட்டுக் கொடுத்திருந்தால் வீழ்ந்திருக்காது அவரது அரசு !

சிறுபான்மை மக்களைக் காப்பாற்ற மதச்சார்பற்ற நிலையெனும் கேடயமும் — வாய்ப்பு இழந்து சமூக அந்தஸ்து பறிக்கப்பட்டுக் கிடக்கும் ஒடுக்கப்பட்ட மக்களின் வழியை அடைத்திருக்கும் ஆதிக்கப் புதர்களில் மறைந்து கிடந்து பாய வரும் ஓநாய்களை வெட்டி வீழ்த்த மண்டல் கமிஷன் எனும் வாளும் — ஏந்திப் போரிட்டவரே வி.பி. சிங் !

இன்று விழுப்புண் தாங்கி நிற்கிறார்! தனி மனிதர்கள் வீழ்த்தப்படலாம்! ஆனால் எய்திட வேண்டுமென்று எண்ணிய இலட்சியங்கள் வீழ்த்தப்படுவதில்லை! இன்று வீழ்ந்தது போலத் தோற்றமளிக்கலாம்! நாளை அந்த இலட்சியங்கள் விசுவரூபம் எடுத்து வெற்றி முரசு கொட்டலாம்!

உடன்பிறப்பே; ஒன்று பார்த்தாயா? அத்வானியும் வாஜ்பேயியும் இராமர் கோயில் கட்ட பாபர் மசூதியை இடிக்க வேண்டுமென்கிறார்கள்!

பாபர் மசூதி என்ன; வி.பி.சிங் ஆட்சிக்கு வந்த கடந்த பதினோறு மாதங்களுக்குள் கட்டப்பட்டதா ? இல்லையே!

நானூறு ஆண்டுக் காலமாக அயோத்தியில் பாபர் மசூதி இருக்கிறதே; அப்படியானால் 1977ல் அத்வானியும் வாஜ்பேயும் ஜனதா ஆட்சியில் மொரார்ஜி தலைமையில் மத்திய அமைச்சர்களாக இருந்தார்களே; அப்போது ஏன் அந்த பாபர் மசூதியை அகற்றிவிட்டு இராமர் கோயில் கட்ட அவர்கள் ஆணை பிறப்பிக்கவில்லை ? அப்போது இரத யாத்திரை செல்ல முடியாமல் பதவி என்னும் சாலைத் தடுப்பு அயோத்தி வழியில் இருந்தது என்கிறார்களா ? அந்தோ பரிதாபம் !

இன்னொன்று; "தமிழ்நாடு இப்போது எல்.டி.டி.இ. கையில் இருக்கிறது" என்று பாராளுமன்றத்தில் பேசியிருக்கிறார் ராஜீவ்!

எல்.டி.டி.இ. ஆயுதம் வாங்கிடக் கோடி கோடியாகக் கொட்டிக் கொடுத்தவர்; ஈழப் போராளிகளுக்கு தமிழ் நாட்டில் இராணுவப் பயிற்சி முகாம்களை நூற்றுக்கணக்கான இடங்களில் அமைத்துக் கொடுத்தவர்; இந்த ராஜீவ் காந்தியும் இவரது காங்கிரஸ் ஆட்சியும்தான் என்பதற்கு புகைப்பட ஆதாரம் வேண்டுமா? ஒளிநாடா ஆதாரம் வேண்டுமா? கோப்புகளின் ஆதாரம் வேண்டுமா?

விடுதலைப் புலிகள் இவரது அடிமைகளாக மாற விரும்பவில்லை என்பதற்காக அவர்கள் மீது புதிய வெறுப்பு! நம்மீது வீண் பழி!

இவரையே மேடையில் வைத்துக்கொண்டு அண்மையில் நடந்த பேரணிக் கூட்டத்தில் அ.தி.மு.க. தலைவி விடுதலைப் புலிகளுக்காக பரிந்து பேசியபோது ராஜீவ் என்ன செய்து கொண்டிருந்தார்? கீழே விழுந்து எடுத்தாரே அந்த கைக் குட்டையால் காதை மூடிக்கொண்டிருந்தாரோ? பிரபாகரனை ஆதரித்து கடந்த வாரம் சென்னை நகரச் சுவர்களில் அ.தி.மு.க. மாணவர் அணியினர் சுவரொட்டி ஒட்டியிருந்தனரே; அவை காங்கிரசார் கண்ணில் படவில்லை போலும்!

பாவம்; பண்டித நேருவின் பேரன் இப்படியொரு பச்சைப் பொய்யைத் தமிழ் நாட்டைப் பற்றி பாராளு மன்றத்தில் சொல்லி — பாட்டனாரின் பண்பாடு, பெருமை இவற்றுக்கு வேட்டு வைத்திடச் கூடாது! நேரு கோபக்காரர்! ஆனால் நேர்மையான தலைவர்! அவர் பேரனா இவர்;

என்று வியப்படையும் நிலை ஏற்படாதவாறு இனியாவது ராஜீவ்காந்தி நடந்து கொள்வாரா ?

மற்றொன்று உடன்பிறப்பே; மண்டல் கமிஷன் பரிந்துரையை அ.தி.மு.க. தலைவியும் அந்தக் கட்சியும் ஆதரிக்க ஒரு நிபந்தனை போட்டுள்ளனர். 27 சதவிகித இட ஒதுக்கீடு என்பதை 50 சதவிகிதமாக உயர்த்த வேண்டுமாம்! இதுதான் நிபந்தனை! இங்குமட்டுமல்ல; நாடாளுமன்றத்திலும் பேசியுள்ளனர்!

27 சதவிகிதத்துக்கே இவ்வளவு இரத்தக்களறி! 50 சதவிகிதம் இப்போதே வேண்டுமாம் இவர்களுக்கு! அதிலும் இரட்டை வேடம்! இந்தியன் எக்ஸ்பிரசுக்கு தந்த பேட்டியில் ஒரு விதம்! இப்போது அதிக சதவிகிதம் 50 வேண்டுமென மற்றொரு விதம்!

ஒருவேளை இன்றோ; நாளையோ மத்தியில் மாற்று அரசு அமைந்தால் இவர்களின் 50 சதவிகித கோரிக்கையை நிறைவேற்றுவார்களா? அல்லது அரசு அமையாமல் தேர்தல் வந்தால் காங்கிரஸ் தேர்தல் அறிக்கையிலும், அ.தி.மு.க. தேர்தல் அறிக்கையிலும் "மண்டல் கமிஷனில் 50 சதவிகித இட ஒதுக்கீடு பிற்படுத்தப்பட்டோருக்கு அளிக்கப்படும்" என்று உறுதிமொழி அளிப்பார்களா? இதற்கு திட்டவட்டமான பதிலை எதிர்பார்ப்பது இயற்கைதானே! தவறல்லவே இப்படி நாம் விளக்கம் கேட்பது!

எப்படியோ; மாநிலங்களை மதிக்கவும் — அளித்த உறுதிமொழிகளை நிறைவேற்றவும் — வீணானதும் வீம்பு நிறைந்ததுமான எதிர்ப்புகளுக்கு வளைந்து கொடுத்து பதவியைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டுமென்ற நிலை

எடுக்காமலும் — நிமிர்ந்து நின்ற ஓர் ஆட்சியின் முதுகில் குத்தி விட்டார்கள்!

அவர்களின் வலையில் விழுந்தவர்கள்; வெகு விரைவில் தமது நிலையினை அறிவார்கள்!

அவர்கள் அறிந்தாலும் அறியாவிடினும்; உடன்பிறப்பே! நாட்டு மக்களுக்கு அறிவிக்க வேண்டியது நம்து பணியாகும்!

முரசொலி அன்புள்ள

*9-11-90* **மு. க.**

மயிலாடுதுறையில் 12-11-90 அன்று நடைபெற்ற மாபெரும் பொதுக் கூட்டத்தில் முதல்வர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு :-

மயிலாடுதுறையில் நடைபெறுகின்ற இந்த மாபெரும் பொதுக்கூட்டத்தில் உங்களையெல்லாம் சந்திக்கின்ற நல்ல வாய்ப்பினை பெற்றமைக்காக மெத்த மகிழ்ச்சியடைகின்றேன்.

கழகம் என்றைக்கும் கழகத்தின் வளர்ச்சிக்காக பாடு பட்ட செயல்வீரர்களை மறவாது என்பதற்கு எடுத்துக் காட்டாகவும், அந்தச் செயல் வீரர்களின் குடும்பங்களை பாதுகாக்கும் அரணாகத் திகழும் என்பதை எடுத்துக் காட்டும் வகையிலும் கழகத்தின் உடன்பிறப்புக்கள் அரும்பாடுபட்டு திரட்டிய நிதியை அந்தக் குடும்பங்களுக்கு வழங்கப்படுகின்ற நிகழ்ச்சியோடு நான் சில கருத்துக்களைச் சொல்ல உங்கள் முன்னால் நின்று கொண்டிருக்கிறேன். அந்தக் குடும்பங்கள் இந்த பாதுகாப்பு நிதியை கழகத்தின் சார்பில் பெறுகின்ற பொழுது எத்தகைய உருக்கம், உணர்ச்சி நம் நெஞ்சத்தை உலுக்குகின்ற நிலைகள் இவைகள் எல்லாம் என்னை இங்கே

பேசுவதற்குக்கூட இயலாத அளவிற்கு வலுவற்றவனாக ஆக்கியிருக்கிறதென்று சொன்னால் என்னை உணர்ந்தவர்கள் தான் அதனைப் புரிந்து கொள்ள முடியும்.

நான் வருகின்ற வழியெல்லாம் பயணம் செய்தகாரில் பேசிக்கொண்டே வந்தேன். இந்த வழியிலே இந்தந்த நண்பர்கள் எல்லாம் இந்த இயக்கத்திற்காகப் பாடுபட்டவர்கள் இருந்தார்கள் அவர்களெல்லாம் இப்படி வாலிப வயதில் நம்மை விட்டு பிரிய நேரிட்டதே இன்னும் சில காலம் அல்லது பலகாலம் இருந்திருப்பார்களேயானால் இந்த இயக்கம் எந்த அளவிற்கு தொடர்ந்து இன்னும் வலிவினைப் பெற்றிருக்கக் கூடும் என்பதை எண்ணியெண்ணி அவர்களிடத்திலே நான் சொல்லிக்கொண்டு வந்தேன்.

இங்கே இந்த நிகழ்ச்சியில் அத்தகைய குடும்பங்கள் சில வற்றிற்கு நிதி தருவதென்பது நமக்கு மன ஆறுதலாக இருந்தாலும்கூட அந்தக் குடும்பத்தின் செல்வங்களாகத் திகழ்ந்து, கழகத்தின் சிங்கங்களாக நடமாடியவர்களை இழந்து விட்டோமே என்கின்ற கவலை நம்முடைய உள்ளத்தை குடையத் தவறுவதில்லை. இருந்தபோதிலும் நம்மை நாமே தேற்றிக் கொண்டு நாம் இருக்கிற காலம் வரையில் நம்முடைய சமுதாயத்திற்கு, நாட்டிற்கு நாம் நேற்று என்ன செய்தோம், இன்றைக்கு என்ன செய்ய வேண்டும். நாளைக்கு இருந்தால் என்ன செய்யப் போகிறோம் என்ற இந்தச் சிந்தனையோடு வாழ வேண்டும். அதற்காகத் தான் இந்தக் காலத்தில் நாம் எடுக்க வேண்டிய முடிவுகள், நம்மை நோக்கி வருகின்ற நிகழ்வுகள், இந்த நாட்டிற்கும் சமுதாயத்திற்கும் கேடு விளைவிக்கக்கூடிய அளவிற்கு தோன்றுகின்ற உற்பாதங்கள் இவைகளைப் பற்றியெல்லாம் எண்ண வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

இங்கே மன்னை அவர்கள் இந்த இயக்கத்திற்கு பல்வேறு இயக்கங்களிலிருந்து இன்றைக்கு வந்து இணைந்தவர் களுடைய பட்டியல்களையெல்லாம் படித்து அவர்களெல்லாம் தங்களை கழகத்தின் உறுப்பினர்களாக ஆக்கிக்கொண்ட மாட்சியினை விளக்கினார். நான் கழக உடன்பிறப்புக்களை யெல்லாம் கேட்டுக்கொள்வேன். இந்த மேடையில் வந்து கழகத்தில் இணைந்த ஒரு ஐம்பது பேர்,. நூறு பேர் மாத்திர மல்ல ஒவ்வொரு நாளும் பட்டிதொட்டியெல்லாம் குக்கிராம மெல்லாம், சிற்றூரெல்லாம், பேரூரெல்லாம் நகர்ப்புற மெல்லாம் நீங்கள் எடுத்து வைக்கின்ற கொள்கை விளக்கங் களால் இன்று நாட்டிலே இருக்கின்ற நடை முறைகளைப் பற்றிய செய்தி விமர்சனங்களால் இந்த நிலை தொடருமே யானால் நாடு என்ன ஆகும்? சமுதாயம் என்ன ஆகும்? நாம் என்ன ஆவோம் என்பன போன்ற முன்னறிவிப்பு களெல்லாம் நீங்கள் எடுத்து வைப்பீர்களேயானால் ஐம்பது பேரல்ல, நூறு பேரல்ல உங்களால் ஒவ்வொரு நாளும் ஐநூறு பேரை, ஆயிரம்பேரை இந்தக் கழகத்திற்கு அழைத்து வர முடியும், அவர்களையெல்லாம் இந்தக் கழகத்திற்கு அழைத்து வரவேண்டுமென்று கேட்பதற்குக் காரணம் இன்றைக்கு கழகம் இளைத்துப்போயிருக்கிறது என்று யாராவது எண்ணிக் கொள்வார்களேயானால் அது தவறு. இந்தச் சமுதாயத்திலே இருக்கிற பலர் தங்களை உணராமல் தாங்கள் யார் என்பதை புரிந்து கொள்ளாமல் எங்கேயோ சிதறிக் கிடக்கிறார்கள். அப்படிச் சிதறிக்கிடக்கின்றவர்களின் பலவீனத்தை வைத்துத் தான் இன்றைக்கு நாட்டில் யார், யாரோ விளையாடிக் கொண்டிருக்கிறார்கள்.

இரண்டு நாளைக்கு முன்பு வரையில் இந்தியாவின் பிரதமராக வீற்றிருந்த வி.பி. சிங் இன்றைய தினம் பிரதமர் இல்லை. அதற்கு என்ன காரணம் என்பதை அமைச்சர் பொன். முத்துராமலிங்கம் இங்கே விளக்கமாக

எடுத்துச் சொன்னார். வி.பி. சிங் செய்த தவறு என்ன ? ஏன் அவர் இன்றைக்கு அந்தப் பதவியில் இருக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டது. ஏன் அவர் வெளியேற்றப்பட்டார். அவருக்கு எதிராக வாக்குகள் எப்படி சேகரிக்கப்பட்டன? ஏன் சேகரிக்கப்பட்டன? இந்தியா முழுமைக்கும் கூட அல்ல. இந்த தமிழ் மாநிலத்தை மாத்திரம் எடுத்துக் கொண்டால்கூட ஏறத்தாழ பதினொரு அல்லது பனிரெண்டு மாத காலத்தில் தேசிய முன்னணியின் ஆட்சியில் வி.பி. சிங் அவர்களை தலைமை அமைச்சராகக் கொண்ட அரசில் தமிழ்நாடு பெற்றிருக்கின்ற பலன், தி.மு.கழகத்தின் கொள்கைகளுக்கு கிடைத்திருக்கின்ற வெற்றி, நீண்ட காலமாக நாம் எடுத்துச் சொல்லி வருகின்ற நம்முடைய குறிக்கோளுக்கு, கோட்பாடுகளுக்கு கிடைத்திருக்கின்ற ஆதாயம் எவ்வளவு என்பதை எண்ணிப் பார்த்தாலே வி.பி. சிங் அவர்கள் இன்றைக்குப் பிரதமர் இல்லை என்ற காரணத்தால் எவ்வளவு பெரிய இடைவெளி ஏற்பட்டிருக்கிறதென்பதை நீங்கள் புரிந்து கொள்ள முடியும்.

## காவேரி பிரச்சினையைத் தீர்க்க நடுவர் மன்றம் அமைந்தது!

தஞ்சை மாவட்டத்தின் மிக முக்கியமான பிரச்சினை காவேரி பிரச்சினை. அந்தக் காவேரி பிரச்சினை 1968-ம் ஆண்டு முதல் தீர்க்கமுடியாமல் இருபது ஆண்டுகளுக்கு மேலாக கிடப்பிலே போடப்பட்டு விட்டதோ என்று கவலைப் படுகின்ற அளவிற்கு ஆகிவிட்ட பிரச்சினை. 67-ம் ஆண்டு முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பேரறிஞர் அண்ணா அவர்கள் 68-ம் ஆண்டு அந்த முயற்சியை தொடங்கினார். கர்நாடக அரசோடு காவேரி பிரச்சினை குறித்துப் பேசுகின்ற முயற்சியை தொடங்கினார். அன்றைக்கு அந்தத் துறைக்கு

நீர்ப்பாசனத்துறைக்கு — பொதுப் பணித் துறைக்கு அண்ணா அவர்களின் அரசில் நான் அமைச்சர் என்கின்ற முறையில் என்னைத்தான் டெல்லிக்கு அனுப்பி வைத்தார். டெல்லி பட்டணத்தில் மத்திய அமைச்சர்கள் முன்னிலையில் — கர்நாடகத்தின் முதலமைச்சராக அன்றைக்கு வீரேந்திர பாட்டீல் இருந்தார். பொதுப்பணித்துறையும் அவருடைய அமைச்சகத்திலே இருந்தது. எனவே பொதுப்பணித்துறை அமைச்சராகவும் இருந்த கர்நாடகத்தின் முதலமைச்சர் வீரேந்திர பாட்டீல், நான், கேரள முதலமைச்சர், மத்திய அமைச்சர்கள் இவர்களெல்லாம் கலந்துபேசி முடிவுகள் தள்ளிப்போடப்பட்டு, ஒத்திப்போடப்பட்டு அதற்குப் பிறகு அண்ணா மறைந்து நான் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு பலமுறை கர்நாடக அரசோடு மத்திய அரசின் முன்னி லையிலே பேசிப்பேசி, அதன் பிறகு வந்த எம். ஜி. ஆர். ஆட்சி யிலும் தி.மு.கழக ஆட்சி காவிரிப் பிரச்சினையில் என்ன நிலை எடுத்ததோ அதே நிலையினை எடுத்து அவர்களும் பேசிப் பார்த்து பயனற்றுப்போய் மீண்டும் நம்முடைய ஆட்சி 89-ம் ஆண்டு வந்த பிறகு தொடர்ந்து எடுக்கப்பட்ட முயற்சியின் காரணமாகவும் தஞ்சை விவசாயிகள் சார்பாக தொடரப் பட்ட வழக்கை அனுசரணையாகக் கொண்டு அரசின் சார்பில் வழக்கறிஞர்களை வைத்து வாதாடச் செய்தது.

உச்சநீதிமன்றத்திலே வாதாடிய பொழுது உச்சநீதி மன்றத்தில் கர்நாடகத்தின் சார்பில் எடுத்து வைக்கப்பட்ட வாதம் என்ன வென்றால் இன்னும் பேசலாம். மத்திய அரசு கர்நாடக முதலமைச்சரையும், தமிழக முதலமைச்சரையும் அழைத்துப் பேசலாம் என்று கேட்கப்பட்டது. இது தொடர் பாக இதுவரையில் இருபத்தியேழு தடவை பேசியாகிவிட்டது. இருபத்தியேழு தடவை பேசி கடைசியாக கர்நாடக முதலமைச்சரோடு பேசி முடிவு ஏற்படாமல் போன பிறகு

நடுவர் தீர்ப்பு ஒன்றுதான் எங்களுக்குத்தேவை. எனவே நடுவர் மன்றம் அமைக்க வேண்டுமென்ற வாதத்தை நம் முடைய வழக்கறிஞர்கள் உச்சநீதிமன்றத்தில் எடுத்து வைத்த போது கர்நாடக அரசு 'இல்லை மறுபடியும் பேசலாம், நீங்கள் மத்திய அரசை கேளுங்கள்' என்று சொன்னது.

மத்திய அரசு கடந்த காலத்தைப்போல ராஜீவ் அரசைப் போல இருந்தால் 'ஆமாம் பேசலாம்' என்று சொல்லி யிருக்கும். அதற்குப் பதிலாக வி.பி. சிங் அரசாக இருந்தது. அந்த நேரத்தில் இங்கே சட்டமன்றம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. அவசர அவசரமாக தீர்மானத்தை நிறை வேற்றினோம். இனி பேச்சுக்கே இடமில்லை. நடுவர்மன்றம் அமைப்பது ஒன்றுதான் வழி என்று தீர்மானம் நிறைவேற்றி னோம். அமைச்சர் துரைமுருகன் தலைமையில் தமிழகத்தி லுள்ள எல்லா கட்சிகளையும் சேர்ந்த நாடாளுமன்ற உறுப் பினர்கள் பிரதமர் வி.பி சிங் அவர்களை சந்திக்கச் செல்வது என்று முடிவு எடுத்தோம் சென்னையில் நடைபெற்ற அனைத்துக் கட்சிக் கூட்டத்திற்கு தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்திற்கு காங்கிரஸ் கட்சி சார்பில் அருமை நண்பர் மூப்பனார் வந்திருந்தார். அ.தி.மு.க சார்பில் எதிர்க் கட்சித் தலைவர் வந்திருந்தார். மற்ற கட்சிகளின் சார்பில் அந்தக் கட்சிகளின் தலைவர்கள் வந்திருந்தார்கள்.

எல்லா கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் சென்று பிரதமர் வி.பி. சிங் அவர்களை சந்திப்பது என்று முடிவு எடுக்கப்பட்டது.

அதன்படி அனுப்பிவைக்கப்பட்டார்கள் அதே நேரத்தில் கர்நாடகத்திலிருந்து கர்நாடகத்தின் முதலமைச்சர் வீரேந்திரபாட்டீல் எதிர் அணியில் இருக்கின்ற ஜனதா தள

தலைவர் பொம்மை, ஹெக்டே இவர்களெல்லாம் பிரதமரை சந்திக்கச் சென்றார்கள். நடுவர்மன்றம் அமைக்கக்கூடாது. தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தலாம் என்று சொல்லி போனார்கள். ஆனால் நாம் இனி நடுவர்மன்றம்தான் தேவை இனி பேச்சுவார்த்தையால் பயனில்லை. இருபதாண்டு கால. மாக பேசிப் பார்த்தாகிவிட்டது. பேச்சு பேச்சு என்று சொல்லிக்கொண்டே புதிய புதிய அணைகளைக் கட்டுகிறார் கள். ஹேமாவதி அணையைக் கட்டினார்கள். கபினியிலே அணையைக் கட்டினார்கள். கிருஷ்ணா சாகரிலிருந்து வர வேண்டிய தண்ணீரை வழியெல்லாம் தடுத்துத் தடுத்து மேட்டூரில் வந்து தேங்க வேண்டிய தண்ணீரை குறைத்து விட்டார்கள். இனியும்பேசிக் கொண்டிருந்தால் நாம் ஏமாந்துவிடுவோம். எனவே பேச்சு தேவையில்லை என்று சொல்ல துரைமுருகன் தலைமையிலே எம். பிக்கள் அடங்கிய தூதுக்குழு சென்றது. டெல்லி வரையிலே சென்றது. டெல்லிக்குச் சென்றதும் காங்கிரஸ்காரர்களும், அ.தி.மு.க.காரர்களும் நாங்கள் இந்தத் தூதுக்குழுவில் வர மாட்டோம் என்று கூறி மறுத்துவிட்டார்கள். ராஜீவ் காந்தி அவர்களுக்கு தி.மு.க.வோடு செல்லாதீர்கள் தனியாகச் செல் லுங்கள் என்று சொல்லி அனுப்பினார். என்னுடன் தொலை பேசி மூலமாக துரைமுருகன் கேட்டார். எப்படியாவது செல்லட்டும். ஒரே நோக்கத்திற்காக சென்றால் எப்படிச் சென்றால் என்ன? நீங்களும் தனியாகச் செல்லுங்கள். அவர் களும் தனியாகச் செல்லட்டும். நம்மை தீண்ட பயப்படுகிறார் கள். தீண்டினால் திருநீலகண்டம் என்கிறார்கள். பரவா யில்லை. அவர்கள் தனியாகச் செல்லட்டும் என்று சொன்னேன்.

## தமிழ்நாட்டையே காட்டிக்கொடுக்க அ.தி.மு.க. மனு கொடுத்தது!

தனியாகச் சென்று என்ன மனு கொடுத்தார்கள் தெரியுமா? 1974-ம் ஆண்டோடு காவேரி ஒப்பந்தம் முடிந்து விட்டதென்று மனு கொடுத்தார்கள். முடியாத ஒப் பந்தத்தை 74-ம் ஆண்டோடு காவிரிக்கு நடைபெற்ற ஒப்பந்தம் முடிந்துவிட்டதென்று தமிழ்நாட்டையே காட்டிக் கொடுக்கின்ற அளவிற்கு தமிழ்நாட்டு விவசாயிகளை வயிற்றில் அடிக்கின்ற அளவிற்கு காங்கிரஸ்காரர்களும், அ.தி.மு.க. காரர்களும் ஒரு மனு எழுதி பிரதமர் வி.பி. சிங் அவர்களிடம் கொடுத்தார்கள்.

நாம் தந்த மனுவில் அந்த ஒப்பந்தம் இன்னும் முடி வடையவில்லை 74-ம் ஆண்டில் அந்த ஒப்பந்தத்தில் என்ன பேசி தீர்க்க வேண்டுமென்றால் காவிரியில் ஏற்கனவே வந்த தண்ணீர்போக மேலும் அதிகமாக வருகின்ற தண்ணீரை இரண்டு மாநிலங்களும் எப்படி பிரித்துக் கொள்வது என்று தான் ஷரத்து இருக்கிறது. 74-ம் ஆண்டோடு ஒப்பந்தம் காலாவதியாகவில்லை என்று எழுதி மனுவை நாம் கொடுத் தோம். இரண்டையும் படித்துப் பார்த்தார் வி.பி. சிங். இதற்கிடையே நம்முடைய தீர்மானமும் சென்றது. மத்திய அரசு என்ன சொல்கிறதென்று உச்சநீதிமன்றம் கேட்டது. கர்நாடக அரசு மேலும் பேசலாம். தொடர்ந்து பேசலாம் என்று வாதம் செய்கிறதே மத்தியஅரசு வி.பி. சிங் அரசு என்ன சொல்கிறது என்று உச்ச நீதிமன்றம் கேட்டது. அதற்கிடையே நாம் சட்டமன்ற தீர்மானத்தை அனுப்பி னோம். மத்தியிலிருந்த வி.பி. சிங் அரசு உச்ச நீதிமன்றத் திற்கு சொல்லியனுப்பியது. இனிமேல் பேசிப் பயனில்லை என்று தமிழ்நாடு தீர்மானித்துவிட்டதென்று சொன்ன ஒரே

ஒரு காரணத்தால்தான் உச்ச நீதிமன்றத் தீர்ப்பு நடுவர் மன்றத்தை அமைக்க வேண்டுமென்று கூறியதென்றால் வி.பி. சிங் ஆட்சியால் இருபதாண்டு காலமாக கிடப்பிலே போடப்பட்ட ஒரு பெரிய பிரச்சினை நடுவர் மன்ற வழக்கிற்கு இன்றைக்கு வந்திருக்கிறது. நாம் தொடர்ந்து வழக்காடிக் கொண்டிருக்கிறோம்.

நம்முடைய சார்பில் வழக்காடுகின்ற வழக்கறிஞர்கள் இடைக்காலத்திலே காவிரியில் தஞ்சை, திருச்சி மாவட்டங் களுக்குத் தேவையான தண்ணீரை முடிவான தீர்ப்பு வருகின்ற வரையில் இடைக்காலத்தில் எங்களுக்குத் தரவேண்டுமென்று வாதாடிக் கொண்டிருக்கிறோம். இப்பொழுது எண்ணிப் பாருங்கள். வி.பி. சிங் பிரதமர் பொறுப்பிலே இல்லாத காரணத்தால் அவரால் கிடைத்த நன்மையை நாம் எண்ணிப் பார்க்கும்பொழுது அதுவும் உயிர்ப்பிரச்சினையான காவிரிப் பிரச்சினைக்கு ஒரு நல்ல தீர்ப்பை வழங்கக்கூடிய நடுவர் மன்றம் அமைப்பதற்குக் காரணகர்த்தாவாக இருந்த வி.பி. சிங் இன்று ஆட்சியில் இல்லையே என்று எண்ணும்பொழுது கவலை தோன்றத்தான் செய்யும். பிரதமர் பதவியில் இல்லையென்பதற்காக வருந்துகின்றவர் வி.பி. சிங் அல்ல. நானும் அதற்காக வருந்தவில்லை. அவர் இருந்தால் எனக் கல்ல இந்த மாநிலத்திற்கு நன்மைகள் பல இன்னும் கிடைத் திருக்குமே என்கின்ற அந்தக் கவலையே தவிர வேறல்ல.

## நெய்வேலிக்காக ரூ.30 கோடி ராயல்டி தந்தவர் வி.பி.சிங்!

அதைப்போலவே தான் பத்தாண்டு காலமாக கிடப்பிலே போடப்பட்ட மண்டல் கமிஷன், பல ஆண்டுகாலமாக கிடப் பிலேபோடப்பட்ட நெய்வேலி. நெய்வேலியிலிருந்து வெட்டி யெடுக்கப்படுகின்ற நிலக்கரி அதிலிருந்து உற்பத்தியாக்கப்படு

கின்ற மின்சாரம் அதற்கு நமக்கு தரவேண்டிய 'ராயல்டி' அந்த ராயல்டியை இதுவரையிலே தமிழக அரசு பெற முடியாமல் தடுக்கப்பட்டது. நாம் இங்கே ஆட்சிப் பொறுப் பிற்கு வந்தோம். அங்கே வி பி. சிங் ஆட்சிப் பொறுப்பிற்கு வந்தார். நான் டெல்லிக்குச் சென்றேன். அங்குள்ள மின் துறை அமைச்சரை சந்தித்துப் பேசினேன். பிறகு பிரதமர் வி.பி. சிங் அவர்களைச் சந்தித்தேன். நிலைமையைச் சொன் னேன். இவ்வளவு ஆண்டுகாலமாக எங்களுக்கு வரவேண்டிய ராயல்டி வரவில்லை என்று சொன்னேன். எவ்வளவு வர வேண்டுமென்று கேட்டார். அங்குள்ள அதிகாரிகள் இருபது கோடி கொடுத்தால் போதுமென்று சொன்னார்கள். இதிலே பேரமல்ல. எங்களுக்கு வரவேண்டிய சரியான கணக்குப்படி முப்பதுகோடி ரூபாய் வரவேண்டுமென்று சொன்னேன். சரி வாங்கிக் கொள்ளுங்கள் என்று உடனடியாக முப்பதுகோடி ரூபாயை நெய்வேலிக்காக ராயல்டிக்காக தந்தவர் வி.பி. சிங்.

இன்று அவர் அங்கே இல்லை. இது நம்முடைய மாநிலத் திற்கு ஏற்பட்ட நஷ்டமா இல்லையா? காங்கிரஸ் ஆட்சியிலே தந்தார்களா? இவ்வளவு ஆண்டு காலம் தராமல்தரமுடியா தென்று சொல்லாமல் தருவோம் என்றும் தாராளம் காட்டா மல் கேள்விக்குறியாக, இருந்த பிரச்சினைக்கு ஒரு விடிவு காலம் ஏற்பட்டதென்றால் அது பிரதமராக இருந்த வி.பி.சிங் அவர்கள் காலத்திலே அல்லவா?

கழகத்தின் மிக முக்கியமான கோரிக்கை, அரசியல் சட்டத்திலே இடம் பெற்ற 'இண்டர் ஸ்டேட் கவுன்சில் என்பதை மத்திய அரசு அமைக்க வேண்டும். அதிலே எல்லா மாநில முதலமைச்சர்களும் உறுப்பினர்களாக இருக்க வேண்டும். மாநிலத்திற்கு மாநிலமுள்ள பிரச்சினைகளை மத்திய அரசிற்குரிய பொதுவான பிரச்சினைகளை அந்த 'இன்டர் ஸ்டேட் கவுன்சிலில்' தமிழிலே சொல்லவேண்டுமே யானால் மாநிலங்களுக்கிடையேயான குழு அல்லது பன் மாநிலக் குழு அந்த இன்டர் ஸ்டேட் கவுன்சிலில் இவைகளை

யெல்லாம் விவாதிக்க வேண்டும். அரசியல் சட்டத்திலே அதற்கு இடம் இருந்தும்கூட அதற்கென்று ஒரு தனியான பிரிவை அன்றைக்கே அம்பேத்கர் எழுதி வைத்துவிட்டுப் போயும்கூட அம்பேத்கருக்கு சிலை எழுப்புகிறோமே தவிர, படம் திறக்கிறோமே தவிர, விழா எடுப்போமே தவிர அவர் சொன்ன மாநிலங்களை மதிக்கக்கூடிய, மாநிலங்களுடைய உரிமைகளை நிலைநாட்டக்கூடிய, மாநிலங்களுடைய குரலை கேட்கக்கூடிய இன்டர் ஸ்டேட் கவுன்சிலை பண்டித நேருவும் ஏற்படுத்தவில்லை. அவருடைய புதல்வி இந்திராகாந்தியும் ஏற்படுத்தவில்லை. இந்திராகாந்தியின் அன்பு மகன் ராஜீவ் காந்தியும் அதை ஏறெடுத்தும் பார்க்கவில்லை.

தேசிய முன்னணிக்கூட்டத்தில் தி.மு.கழகத்தினர் சார்பிலும் தெலுங்கு தேசக் கட்சியின் சார்பிலும் அஸ்ஸாம் கண பரிஷத் சார்பிலும் காங்கிரஸ் (எஸ்) கட்சி சார்பிலும் இந்த இன்டர் ஸ்டேட் கவுன்சிலை பற்றி எடுத்துரைத்தவுடன் அதை உடனடியாக ஏற்றுக்கொண்டு இன்டர் ஸ்டேட் கவுன்சில் கூட்டத்தை கடந்த மாதம் டெல்லி பட்டணத்திலே கூட்டி முதலமைச்சர்களாகிய நாங்களெல்லாம் கலந்து கொண்டு மாநிலத்தின் சார்பாக உரத்த குரலை எழுப்பினோம். மாநில உரிமைக்காக வாதாடினோம். இன்னும் அதனுடைய தொடர்பணிகள் ஆரம்பமாகாத கால கட்டத்தில் வி.பி. சிங் ஆட்சி இன்றைக்கு கவிழ்க்கப்பட்டிருக்கிறது.

நாற்பதாண்டு காலமாக அரசியல் சட்டத்திலே இடம் பெற்ற ஒரு பிரிவு செயல்படுத்தப்படாமல் இருந்ததை இன்றைக்கு மாற்றியமைத்து — இனி இன்டர் ஸ்டேட் கவுன்சில் வரும். வந்துவிட்டதும் அது செயல்படுமென்ற அந்த சாதனையைப் புரிந்த வி.பி. சிங் ஆட்சியிலே இல்லாத காரணத்தால் தி.மு கழகத்தினுடைய கோட்பாடு ஒன்றுக்கு ஏற்பட்ட இழப்பா அல்லவா என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

ராஜீவ் காந்தி ஆண்டபொழுது தமிழகத்தில் தி.மு. கழகம் ஆட்சிக்கு வந்து விட்டதென்பது உங்களுக்குத் தெரியும். தி.மு. கழக ஆட்சி இங்கே! ராஜீவ் காந்தி ஆட்சி அங்கே! நான் முதலமைச்சர் என்கின்ற முறையில் பிரதமரை சந்திக்க வேண்டுமென்கின்ற மரியாதை சந்திப்பு. அதே நேரத்தில் மாநிலத்தின் தேவைகளை எடுத்துச் சொல்லக்கூடிய சந்திப்பு. அந்த சந்திப்பில் அவரிடத்திலே சொன்னேன். தமிழ் நாட்டிற்கு மத்திய அரசின் தொகுப்பிலிருந்து வந்த அரிசியை நாங்கள் ஆட்சிப் பொறுப்பிற்கு வந்தவுடன் முப்பதாயிரம் டன்னாக குறைத்து விட்டீர்கள். தமிழ் நாட்டு மக்கள் பட்டினி கிடக்கிறார்கள். எனவே அதை உயர்த்தித் தர வேண்டும். ஒரு ஐம்பதாயிரம் டன் அல்லது எழுபதாயிரம் டன் அரிசி எங்களுக்குத் தேவை. உங்களால் முடியாவிட்டால் ஐம்பதாயிரம் டன்னாவது கொடுங்கள். அதை முப்பதாயிர மாக குறைத்துவிட்டீர்களே என்று கேட்டேன். ஆகட்டும் யோசிக்கிறேன் என்று சொன்னார். தரவில்லை.

## தமிழகத்திற்கு 75 ஆயிரம் டன் அரிசி வழங்கியது வி. பி. சிங் ஆட்சி!

நீங்கள் மறந்திருக்க மாட்டீர்கள். தமிழ்நாடு முழுவதும் நானும் நம்முடைய தோழமைக் கட்சிகளும் சேர்ந்து தமிழ் நாட்டு மக்களை பட்டினி போடாதே! எங்களுக்குத் தேவை யான அரிசியைக் கொடு என்று மனிதச் சங்கிலிப் போராட்டம் நடத்தினோம். உண்ணாவிரதம் இருந்தோம். ஆர்ப்பாட்டங் கள் நடத்தினோம் அப்படிச் செய்தும்கூட முப்பதாயிரம் டன்னுக்கு மேல் அரிசி கிடையாது என்று கைவிரித்து விட் டார்கள். வி. பி. சிங் பிரதமராகப் பொறுப்பேற்றவுடன் இன்றைக்கு மாதந்தோறும் நமக்குக் கிடைத்து வருகிற அரிசி மத்திய அரசின் தொகுப்பிலிருந்து எழுபத்தி ஐந்தாயிரம் டன் அரிசி இன்றைக்குக் கிடைக்கிறதென்று சொன்னால்

ராஜீவ் காந்தி ஆட்சிக்கும், வி.பி.சிங் ஆட்சிக்கும் உள்ள வேறுபாட்டை நீங்கள் புரிந்து கொள்ளலாம்.

எந்த அளவிற்கு தமிழ்நாட்டு மக்களை வஞ்சம் தீர்க்க எண்ணினார்கள். என்ன காரணம்? தமிழ் நாட்டு மக்களை பட்டினி போட்டால் நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு. கழகத்தை தோற்கடிப்பார்கள் என்பதற்காக ஒரு அரசியலில் ஒரு பெரிய சூழ்ச்சியில் ஈடுபட்டு நமக்குத் தரவேண்டிய பங்கீட்டை நாம் கேட்ட ஐம்பதாயிரம் டன் அரிசியை தர மறுத்து ஏற்கனவே தந்த நாற்பதாயிரம் டன்னையும், முப்பதாயிரம் டன்னாக குறைத்து அவதிக்கு ஆளாக்கினார்கள். ஆனால் இன்றைக்கு நமக்கு மாதந்தோறும் வி.பி. சிங் ஆட்சியில் எழுபத்தி ஐந்தாயிரம் டன் அரிசி தரப்படுகிறது. எனவேதான் தமிழ்நாட்டில் உணவுப் பற்றாக்குறை இல்லை என்கின்ற சூழ்நிலை உருவாகியிருக்கின்றது.

அவ்வளவு ஏன்? சென்னை மாநகரத்தில் ஒரு விமான நிலையம் உள்ளது. அந்த விமான நிலையத்திற்கு எத்தனையோ ஆண்டு காலமாக பெயர் வைக்க வேண்டுமென்று கேட்டோம். அதற்கு காமராஜ் பெயர், அண்ணா பெயர் வைக்க வேண்டுமென்று கேட்டோம். மத்தியில் இருந்த காங்கிரஸ் அரசு செவி சாய்த்ததா? ஏறிட்டுப் பார்த்ததா? தேவையா என்று விவாதிக்கவாவது முன் வந்ததா? கிடையாது. சென்னை கடற்கரையில் ஒரு கூட்டத்தில் பேச பிரதமர் வி.பி.சிங் வந்தார். அந்தக் கூட்டத்தில் நான் பேசும்பொழுது சென்னையில் இருக்கிற விமான நிலையம் வெளிநாட்டு பயணிகள் ஏறி இறங்குகின்ற விமான நிலையம், உள்நாட்டு பயணிகள் ஏறி, இறங்குகின்ற விமான நிலையம் என்று இரண்டு விமான நிலையங்கள் இருக்கின்றன. ஒன்றிற்கு பெருந்தலைவர் காமராஜர் பெயரும், மற்றொன்றிற்கு பேரறிஞர் அண்ணாவின் பெயரும் சூட்டப்பட வேண்டுமென்று கேட்டுக் கொண்டேன். அதே மேடையில் உறுதியளித்தார். உள்நாட்டுப் பயணிகள் ஏறி, இறங்குகின்ற அந்த விமான நிலையத்திற்கு பெருந்தலைவர் காமராஜர் பெயரும்,

வெளிநாட்டு பயணிகள் ஏறி இறங்குகின்ற விமான நிலையத்திற்கு பேரறிஞர் அண்ணா பெயரும் உடனடியாக சூட்டப்படுமென்று அறிவித்தார். இன்றைக்கு விமான நிலையத்திலே அண்ணா பெயரும், காமராஜர் பெயரும் ஒளிவிட்டுக் கொண்டிருக்கின்ற காட்சியை காண்கிறோம். இவைகளெல்லாம் இந்த மாநிலத்தின் உரிமைகளுக்குத் தரப்பட்ட மரியாதை இந்த மாநிலத்தின் தேவைகளுக்குத் தரப்பட்ட மரியாதை.

கடைசியாக அவர் பிரதமர் பதவியிலிருந்து வெளியேற்றப் படுவதற்கு ஒரு மாதத்திற்கு முன்பாகத்தான் சென்னையில் ஐம்பெரும் விழாவில் கலந்துகொள்ள பிரதமர் வி.பி. சிங் வந்தபொழுது தமிழ்நாட்டின் தொழிற்சாலை 1986-87-லிருந்து கிடப்பிலே போடப்பட்ட ஒரு பெரிய தொழிற்சாலை ஆயிரத்து முந்நூறு கோடி ரூபாய்க்கு மேற்பட்ட முதலீட்டில் உருவாக வேண்டிய தொழிற்சாலை ஆரோமெட்டிக் தொழிற்சாலை. அதற்கான அனுமதியை வழங்க வேண்டுமென்று நான் கேட்டேன். அப்பொழுது பிரதமர் வி.பி. சிங் எந்த மாநில முதலமைச்சரும் என்னிடத்திலே இதுபோன்ற கோரிக்கைகளை கேட்க அடிக்கடி டெல்லிக்கு வரவேண்டிய அவசியம்கூட இல்லை. முதலமைச்சர் அங்கிருந்தே தொலை பேசி மூலம் என்னிடத்திலே பேசினாலே அந்தத் தேவைகளை நிறைவுசெய்ய என்னுடைய அரசு தயாராக இருக்கிறது என்று சென்னை கடற்கரை கூட்டத்தில் பேசினார்.

## ஆரோமெடிக் தொழிற்சாலைக்கு அங்கீகாரம் அளித்தவர் வி. பி. சிங்!

அந்த ஐம்பெரும் விழாவிற்கு உடன்பிறப்புக்களே உங்களிலே பலர் வந்திருக்கக்கூடும். அந்தக் கூட்டத்திலே தான் சொன்னார். முதலமைச்சர் இதற்காக டெல்லிக்கு வரத் தேவையில்லை என்று சொன்னார். அடுத்த நாளே

பிரதமர் டெல்லிக்குச் சென்றார். அமைச்சரவை கூட்டத்தைக் கூட்டினார். அமைச்சரவையிலே ஆரோமெட்டிக் தொழிற்சாலை சென்னைக்கு வழங்கப்படுமென்று முடிவு எடுக்கப்பட்டது. அந்த முடிவு அறிவிக்கப்பட்டது. அதை மறந்திருக்கமாட்டீர்கள். அதற்கு பிறகு அந்த முடிவை அறிவித்ததோடு நில்லாமல் சம்பிரதாயப்பூர்வமான, சட்டப் பூர்வமாக எந்தெந்த வகையில் அங்கீகாரம் தரவேண்டுமோ, அவ்வளவு அங்கீகாரமும் தரப்பட்டு இன்றைக்கு எழுதப் பட்ட கடிதம் நாளைக்கு நம்முடைய கைக்கு சேருவதற்கு முன்பு அவருடைய ஆட்சி கலைக்கப்படுகிறது. டெல்லியிலே உள்ள பத்திரிகைகளெல்லாம் எழுதுவதாக நான் கேள்விப்பட்டேன். ஆரோமெட்டிக் தொழிற்சாலை நின்று விட்டது. அது சென்னைக்கு கிடைக்காதென்பதாக எனக்குச் செய்தி கிடைத்துள்ளது.

அரசியல் ரீதியாக பிரதமர் சந்திரசேகர் இந்தப் பிரச்சினையை அணுகுவார் என்று நான் எதிர்பார்க்கவில்லை. இன்னமும் நம்பிக்கொண்டிருக்கிறேன். ஆனாலும் ஆயிரத்து முன்னூறு கோடிக்கான ஒரு தொழிற்சாலையை பிரதமர் பதவியிலிருந்து விடைபெறுவதற்கு முன்பு, ஒரு மாத காலத்திற்கு முன்பு நமக்கு வழங்கிய பெருமைக்குரியவர் பிரதமராக இருந்த வி.பி. சிங் அல்லவா? அவர் இன்னமும் தொடர்ந்து இருந்தால் தமிழகத்தை சோலைவனமாக ஆக்கக்கூடிய அந்த வாய்ப்புக்களை நாம் பெற்றிருக்கக் கூடும். இன்றைக்கு அவர் பிரதமராக இல்லை.

இல்லாமல் செய்யப்பட்டதற்கு மிக முக்கியமான காரணம் தமிழ்நாட்டிற்கு இவைகளையெல்லாம் தந்தார் என்பதல்ல. அவர் செய்யக் கூடாத ஒரு பெரிய பாவத்தை செய்து விட்டார். ஒரு பயங்கரமான குற்றத்தைச் செய்து விட்டார். ஆயுள்தண்டனைகூட தரலாம், அவர்களுடைய கணக்கின்படி! தூக்கிலே கூட போடலாம், அந்த தூயவர்களுடைய எண்ணப்படி! என்ன குற்றம்? என்ன பாதகம்? இந்தநாட்டிலே இருக்கின்ற தாழ்த்தப்பட்டவன், பிற்படுத்தப்

பட்டவன், மிகவும் பிற்படுத்தப்பட்டவன் அவனெல்லாம் படுகுழியிலே கிடக்கிறான் அல்லவா? அவனையெல்லாம் கைதூக்கிவிட கையை நீட்டினார். கையை நீட்டுகிறாயா? காலை வெட்டுகிறேன் பார் என்று வெட்டிவிட்டார்கள். இதுதான் அவர் செய்த பெரிய தவறு.

மண்டல் கமிஷன் என்றால் என்னவென்பது தமிழ் நாட்டிலே உள்ள சிலபேருக்கு இன்னமும்கூட புரியாமல் இருக்கலாம். ஏனென்றால் வடக்கே உள்ளவர்களுக்கு இது அறவே புரியவில்லை. யாருக்குப் புரியவில்லை தெரியுமா? யாருக்காகமண்டல் கமிஷன் கொண்டுவரப்பட்டிருக்கிறதோ அவர்களுக்குப் புரியவில்லை. யாருக்குப் புரிந்திருக்கிறது தெரியுமா? அங்கே மண்டல் கமிஷன் கூடாதென்று யார் கருதுகிறார்களோ அவர்களுக்கு மண்டல் கமிஷன் என்றால் என்ன என்று புரிந்திருக்கிறது. அதுதான் வேடிக்கை.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு கல்வியில், வேலை வாய்ப்பில் இவ்வளவு சதவிகிதம் இட ஒதுக்கீடு என்பது இன்று நேற்றல்ல. *1914*-ஆம் ஆண்டு கேள்வியாக எழுந்து *1916*-ஆம் ஆண்டில்அரும்பத் தொடங்கி *20, 21*-ஆம் ஆண்டில் மலரத்தொடங்கியது இடஒதுக்கீடு என்ற அந்தக் கொள்கை. *1914*-ஆம் ஆண்டு நம்முடைய சட்டமன்ற மேலவைக் கூட்டத்தில் குன்ஹிராமன் நாயர் என்பவர் ஒரு கேள்வி கேட்கிறார். நீங்கள் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். நான் சொல்கிற ஆண்டு *1914*-ஆம் ஆண்டு. நான் பிறப்பதற்கு பத்தாண்டிற்கு முன்பு!

## பிட்டி தியாகராயர் வெளியிட்ட பிராமணரல்லதார் கொள்கை அறிக்கை!

*1914*-ஆம் ஆண்டு சட்டமன்ற மேலவை கூட்டத்தில் குன்ஹிராமன் நாயர் என்ன கேள்வி கேட்கிறார் தெரியுமா? சென்னை பல்கலைக் கழகத்தில் பதிவு செய்யப்பட்ட பட்டதாரிகள் எத்தனைபேர் என்று கேட்கிறார். அதற்கு

சொல்லப்பட பதில் அறுநூற்றி ஐம்பது பேர். குன்ஹிராமன் நாயர் இன்னொரு கேள்வியையும் கேட்கிறார். அந்த அறு நூற்றி ஐம்பது பேரில் மிக உயர்ந்த ஜாதியினர் எத்தனை பேர்? பிற ஜாதியினர் எத்தனை பேர்? என்று கேட்கிறார். நானூற்றி ஐம்பத்து இரண்டு பேர் உயர் சாதியினர் என்று பதில் கூறப்படுகிறது. மற்ற ஜாதியினர் தொண்ணூற்றி எட்டு பேர். அதிக எண்ணிக்கையை பெரும்பான்மையாக பெற்றிருக்கின்ற மற்ற ஜாதிக்கு தொண்ணூற்றி எட்டு. குறுகிய சிறுபான்மையாக இருக்கின்ற ஜாதிக்கு நானூற்றி ஐம்பத்தியிரண்டு. இதை ஏன் என்று கேட்டதற்குத்தான் நமக்குக் கிடைத்த பட்டம் வகுப்புவாதிகள்' என்பதாகும்.

அந்தப் பட்டத்தை முதன்முதலாக பெற்றுக்கொண்டவர் சர் பிட்டி தியாகராயர்: திராவிட இயக்கத்தின் தோன்றல் சர் பிட்டி தியாகராயர். அவர்தான் 1916-ஆம் ஆண்டு தென்னிந்தியாவில் இருக்கின்ற உயர்ஜாதி அல்லாத மக்களுக் கெல்லாம் ஒரு அறிக்கையை தருகிறார். வரலாற்றுப் புகழ் மிக்க அறிக்கை. 1916-ஆண்டு கிட்டதட்ட எழுபது அல்லது எழுபத்தி ஐந்து ஆண்டுகளுக்கு மேற்பட்ட வரலாற்றை கொண்ட திராவிட இயக்கத்தின் முதல் குரல் தியாகராயர் வாயிலாக ஒலிக்கிறது. என்ன குரல் தெரியுமா? அந்த அறிக்கையில் காணப்படுகின்ற வாசகம் அறிக்கையினுடைய தலைப்பே. 'பிராமணர் அல்லாதார் கொள்கை அறிக்கை' என்பதாகும். எங்களுடைய உறுதியான நம்பிக்கை என்ன வென்றால் இன்றும் சிறிது காலத்திற்காகவாவது ஒவ்வொரு வகுப்பாரும் தங்களுடைய வளர்ச்சியை முதன்மையாகக் கருத வேண்டும். பிற வகுப்போடு சேர்ந்து பணியாற்றும் பொழுது தான் தாழ்ந்தவன் என்று கருதாமல் சுயமரியாதையுடன் சம உரிமை பெற்றவன் என்று எண்ண வேண்டும். சுயமரியாதை யுடன் சமநிலையிலே இருந்து மற்றவர்களோடு பணியாற்று வதையே ஒவ்வொருவரும் குறிக்கோளாக கொள்ள வேண்டும். இதுதான் அந்த அறிக்கையில் இருந்த முக்கியமான தாத் பரியம். இதுதான் மைய இழை.

அந்த அறிக்கைக்கு பிறகுதான் 20 - 11 - 1920-ல் நடைபெற்ற முதல் தேர்தலில் திராவிட இயக்கம் பெரும் வெற்றியைப் பெறுகிறது. அப்பொழுது இந்த இயக்கத்திற்குப் பெயர் 'தென்னிந்திய நல உரிமைச் சங்கம்' என்பதாகும். அந்த இயக்கம் ஒரு பத்திரிகை நடத்தியது. அந்த பத்திரிகை ஆங்கில பத்திரிகை. அதற்குப் பெயர் 'ஜஸ்டீஸ்' என்பதாகும். 'ஜஸ்டீஸ்' என்ற ஆங்கிலத்திற்கு தமிழ்மொழி பெயர்ப்பு 'நீதி' என்பதாகும். ஜஸ்டீஸ் என்ற பத்திரிகையின் பெயரால் இந்த இயக்கத்தை அழைப்பது எளிதாக இருந்த காரணத்தால் ஜஸ்டீஸ் கட்சி என்று அழைத்தார்கள். அதைத் தான் தமிழில் மொழி பெயர்த்து நீதிக்கட்சி என்று அழைக்கத் தொடங்கினார்கள்.

உண்மையிலேயே இந்த இயக்கத்தின் பெயர் 'தென்னிந்திய நல உரிமைச் சங்கம்' *"South Indian Liberal Federation"* *(S.I.L.F.)* என்பதாகும். அந்த இயக்கம் வெற்றி பெற்ற பிறகு அதனுடைய தலைவர் தியாகராயரை அழைத்து முதலமைச்சர் பொறுப்பை ஏற்றுக்கொள்ள அன்றைக்கிருந்த ஆங்கிலேய கவர்னர் கேட்டுக் கொண்டார். தியாகராயர் மறுத்துவிட்டார். நான் இயக்கத்தின் தலைவனாகவே இருக்கப்போகிறேன். சுப்பராயலு ரெட்டியாரை முதலமைச்சராகவும், பனகல் அரசரை இரண்டாவது அமைச்சராகவும், கே. வி. ரெட்டியை மூன்றாவது அமைச்சராகவும் நியமித்துக் கொள்ளுங்கள் என்று சொன்னார். அப்பொழுது தான் காங்கிரஸ்காரர்கள் சொன்னார்கள். இவர்கள் வெள்ளைக்காரர்களுக்கு வால் பிடிப்பவர்கள். ஆங்கிலேயருடைய பூட்ஸை துடைப்பவர்கள் என்றெல்லாம் சொன்னார்கள்.

நான் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். அதிலும் குறிப்பாக இளைஞர்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். வெள்ளைக்காரர்களுக்கு வால் பிடிப்பவர்கள் என்று சொல்கிறார்களே காங்கிரஸ்காரர்கள், அவர்களைப் பார்த்து

நீங்கள் கேட்க வேண்டிய கேள்வி. ஐயா காங்கிரஸ் இயக்கம் எதற்காக ஆரம்பிக்கப்பட்டது. விடுதலைக்காகவா? அல்ல! காங்கிரஸ் இயக்கம் ஆரம்பிக்கப்பட்டதே இந்தியாவை ஆங்கிலேயர் ஆண்டு கொண்டிருந்த பொழுது இந்தியர்களுக்கு அதிக உத்யோகம் வேண்டுமென்ற கோரிக்கை வைப்பதற்காக காங்கிரஸ் கட்சி ஆரம்பிக்கப்பட்டது. யாரால் ஆரம்பிக்கப்பட்டது? வங்கத்திலே பிறந்தவனா அல்லது தமிழகத்திலே பிறந்தவனா? பீகாரிலே பிறந்தவனா? உத்திர பிரதேசத்தில் உதித்தவனா? எவனும் அன்றைக்கு காங்கிரஸ் கட்சித் தலைவன் அல்ல! ஆரம்பித்தவன் அல்ல!

காங்கிரஸ் கட்சியை ஆரம்பித்தவன் ஹியூம் என்ற வெள்ளைக்காரன்தான். ஆரம்பித்ததின் நோக்கம், குறிக்கோள், கொள்கை இவைகளெல்லாம் 'ஏ ஆங்கிலேய அரசே! நீ ஆங்கிலேயர்களுக்கு அதிக உத்யோகங்களை தருகிறாய். அதை மாற்றி இந்தியர்களுக்கு அதிக உத்யோகங்களை தர வேண்டும்' என்பது கோரிக்கை. அந்தக் கோரிக்கைகளை வைத்த கட்சிக்குப் பெயர் காங்கிரஸ். அந்தக் காங்கிரஸ் கட்சியைத் தொடங்கியவர் ஹியூம் என்ற வெள்ளைக்காரன். ஆங்கிலேயர்கள் இந்தியர்களுக்கு வேலை வாய்ப்புகளை கொடுக்க ஆரம்பித்தனர். அப்படிக் கொடுத்த பொழுது அந்த வேலையெல்லாம் யாருக்கோ போனது. இந்தியர்களுக்கு வந்தது. ஆனால் இந்தியர்களிலேயே யாருக்கோ போனது. இந்தியர்களுக்கு கேட்டீர்கள் கிடைத்தது. ஆனால், எங்களுக்குக் கிடைக்கவில்லை என்று தென்னகத்திலே உள்ள நாம் அன்றைக்குக் குரல் எழுப்பினோம். அந்தக் குரலுக்கு சொந்தக்காரர்தான் சர் பிட்டி தியர்கராயர். சொந்தக்கார இயக்கம்தான் திராவிட இயக்கம்.

நாங்கள் உத்யோகத்தில் பங்கு கேட்டோம். உண்மை. நீ உத்தியோகத்தில் கேட்டு வாங்கினாயே பங்கு, அதை ஒரு சாராருக்கே எடுத்துக்கொண்டாய் அல்லவா, ஒரு சாராருக்கே உத்யோகங்கள் எல்லாம் போகக்கூடாது. இங்கே இருக்கின்ற வன்னியர், முக்குலத்தோர், செட்டியார், முதலியார் எல்லோருக்கும் வரவேண்டும். யாரோ ஒரு பெரிய

ஜாதிக்கு இவைகளெல்லாம் போகக் கூடாது என்பதற்காகத் தான் தென்னிந்திய நல உரிமைச் சங்கம் அன்றைக்குக் குரல் எழுப்பியது. இப்படி படிப்படியாக வளர்ந்து இன்றைய தினம் இந்தியாவில் தமிழ்நாட்டில் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு முப்பது சதவிகிதம், மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு இருபது சதவிகிதம், தாழ்த்தப்பட்டவருக்கு பதினெட்டு சத விகிதம் மலையில் இருக்கின்ற ஆதிவாசிகள் பழங்குடியினருக்கு ஒரு சதவிகிதம் மீதமுள்ளது எல்லா ஜாதிக்காரரர்களுக்கும் முன்னேறியவர்களுக்கும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கும் எல்லோருக்கும் சேர்த்து முப்பத்தொரு சதவிகிதம் என்று இன்றைக்கு தமிழகத்திலே இருக்கிறது.

ஆனால் இன்னமும்கூட வடக்கே சில மாநிலங்களில் இந்த இட ஒதுக்கீடு இல்லை. அங்கே பிற்படுத்தப்பட்டவன் கல்வியிலும், வேலை வாய்ப்பிலும் பின்னடைந்து கிடக்கிறான். 1973-ஆம் ஆண்டு அலகாபாத்தில் நடைபெற்ற பிற்பட்டோர் மாநாட்டிற்கு நான் அழைக்கப்பட்டிருந்தேன். அந்த மாநாட்டில் பேசும்பொழுது ‘சில மாநிலங்களில் தாழ்த்தப் பட்டோருக்கு, பிற்பட்டோருக்கு வேலை வாய்ப்பில், கல்வியில் இட ஒதுக்கீடு இருக்கிறது. இவர்களுக்கென்று இத்தனை இடத்தை ஒதுக்கி விட்டால் அந்தக்கல்வி கூடத்தில் அவர்கள் தான் சேரலாம். வேறு உயர்ந்த ஜாதிக்காரரர்களை சேர்க்க முடியாது. அதைப்போல வேலைவாய்ப்பில் நூறு பேருக்கு வேலையா அதில் இத்தனை சதவிகிதம் இவர்களுக்கு கொடுத்து விடு என்று தமிழ்நாட்டில் இருப்பதைப் போல் இந்தியாவில் மத்திய அரசில் இல்லை. எனவே மத்திய அரசு வேலை வாய்ப்புகளிலும் இதனை கொண்டு வரவேண்டும்’ என்று சொன்னேன்.

ஆனால் மத்திய அரசில் வேலை வாய்ப்புக்கள் எப்படி இருக்கின்றது என்றால் நான் சொல்லவில்லை. மண்டல் கமிஷன் தயாரித்த அறிக்கையில் உள்ள புள்ளி விவரத்தை உங்களுக்குப் படித்துக் காட்டுகிறேன். எல்லோரும் படித்த

புத்தகம்தான் அது. நீங்களெல்லாம் படித்திருக்க மாட்டீர்கள். இந்திய அரசியல் வாணில் உள்ள அரசியல் வாதிகள், இதைப்பற்றி அக்கறை கொண்டவர்கள் அத்தனை பேரும் படித்த புத்தகம்தான். மண்டல் கமிஷன் அறிக்கைப்படி மத்திய அரசில் மாத்திரம் நான் மாநில அரசை சொல்லவில்லை. இரண்டையும் போட்டு சில காங்கிரஸ்காரர்கள் குழப்பிக் கொள்கிறார்கள்.

மத்திய அரசில் மாத்திரம் வேலை வாய்ப்பில் நிதித் துறையில் கிளாஸ் I அதிகாரிகள் என்கின்ற அந்தப் பட்டியலில் மொத்தம் இருக்கின்ற அதிகாரிகள் ஆயிரத்தியெட்டுப் பேர். அதில் உயர்ஜாதிகாரர்கள் தொள்ளாயிரத்து நாற்பத்தொரு பேர். தாழ்த்தப்பட்டவர் அறுபத்தி ஆறுபேர். தாழ்த்தப்பட்டவருக்கு ஏற்கனவே விகிதாச்சாரம் பிரிக்கப்பட்டு இட ஒதுக்கீடு இருக்கிறது. எவ்வளவு தெரியுமா? இருபத்தியிரண்டரை சதவிகிதம். இருபத்தியிரண்டரை சதவிகிதப்படி அவர்களுக்கு இந்த ஆயிரத்தியெட்டில் கிடைத்திருக்க வேண்டிய இடம் இருநூற்றி இருபத்தியேழு. ஆனால் அவர்களுக்கு கிடைத்திருக்கின்ற இடம் அறுபத்தி ஆறு.

வி. பி. சிங் அறிவித்தாரே - மண்டல் கமிஷன் சிபாரிசு செய்ததே அதன்படி இருபத்தியேழு சதவிகிதம் ஒதுக்கினால் நமக்குக் கிடைத்திருக்க வேண்டிய இடம் இருநூற்றி எழுபத்தியிரண்டு ஆகும். ஆயிரத்தெட்டில் உயர்ஜாதி தொள்ளாயிரத்து நாற்பத்தொன்று. தாழ்த்தப்பட்டவர் அறுபத்தாறு. பிற்படுத்தப்பட்டவர் ஒன்றே ஒன்று. ஒரே ஒரு இடம். இந்த அநீதியைப் போக்கத்தான் வி. பி. சிங் மண்டல் கமிஷன் அறிக்கையை நிறைவேற்றுவேன் என்று சொன்னார்.

கிளாஸ் II அதிகாரிகள் மொத்தம் இரண்டாயிரத்து எண்ணூற்றி இருபத்தி நான்கு பேர். தாழ்த்தப்பட்டவர் முன்னூற்றி ஆறுபேர். உயர் ஜாதியினர் இரண்டாயிரத்தி ஐநூற்றி ஏழு பேர். பிற்படுத்தப்பட்டவர் பதினொரு பேர். இந்த அநீதியைப் போக்கத்தான் மண்டல் கூறிய இருபத்தியேழு சதவிகிதத்தையாவது முதலில் அமல்படுத்துவோம் என்று வி. பி. சிங் அறிவித்தார்.

ஆகஸ்ட் 7-ந் தேதி அறிவித்தார். நான் பத்திரிகையிலே அறிக்கை விட்டதைப்போல ஆகஸ்ட் 7-ந் தேதி அறிவித்ததற்கு நவம்பர் 7-ந் தேதி விலை கொடுத்து விட்டார்.

பிற்படுத்தப்பட்டவனுக்காக வாதாடலாமா? தாழ்த்தப்பட்டவனுக்காக வாதாடலாமா? நமக்காக வாதாடினார். அதற்காக வீழ்ந்தார் என்று நினைத்துப்பார்க்கின்ற நிலைகூட பிற்படுத்தப்பட்டவனுக்குக் கிடையாதே. அவனுக்காக வாதாடுகிறவருக்கு இப்படிப்பட்ட ஒரு நிலை ஏற்பட்டது என்று எண்ணிப்பார்க்கின்ற அந்த தகுதி கூட பிற்படுத்தப்பட்ட சமுதாயத்திற்கு, தாழ்த்தப்பட்ட சமுதாயத்திற்கு இல்லாமல் போய் விட்டது.

நான் ஒரு தொடர் கதையில் எழுதியிருந்தேன். வாழை மரத்தை வெட்டி கல்யாண வீட்டு வாசலில் கட்டியிருந்தால் அந்த வாழை மரத்தில் இருக்கின்ற இலைகள், தான் வெட்டப்பட்டதைக் கூட உணராமல் கல்யாணத்திற்கு வருகின்றவர்களை பார்த்து வா, வா என்று கையசைத்துக் கொண்டிருக்கும். அதைப் போலதான் பிற்படுத்தப்பட்ட சமுதாயம் தான் வெட்டப்பட்டதைப் பற்றிகூடக் கவலைப் படாமல் வி.பி. சிங் போனால் என்ன, போகாவிட்டால் என்ன என்று கருதிக் கொண்டிருக்கிறது.

ஏன் காங்கிரஸ் கட்சியில் பிற்படுத்தப்பட்டவர் இல்லையா? அந்த பிற்படுத்தப்பட்டவருக்கெல்லாம் இத்தகைய அநீதி ஒன்று இன்றைக்கு டெல்லியிலே இழைக்கப்பட்டிருக்கிறதென்பது புரியாதா? மண்டல் கமிஷன் என்று அறிவித்து சமுதாயத்தில் வாய்ப்பற்று கிடக்கின்ற ஏழை, எளிய மக்கள், பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்கள் இவர்களுக்காக ஒரு நிலை எடுத்தார் என்பதற்காக

இதை வெளியே சொன்னால் பிற்படுத்தப்பட்ட மக்களின் ஆதரவு கிடைக்காமல் போய் விடுமென்று எண்ணி அதை மறைத்துவிட்டு ராமன் பெயரைகொண்டு வந்தார்கள். ராமனுக்கு கோவில் கட்டப் போகிறோம் என்றார்கள். யார் கட்ட வேண்டாமென்றார்கள்? ராமனுக்கு கோவில் கட்டட்டும். லட்சுமணனுக்கு கோவில் கட்டட்டும். சீதைக்கு ஒரு தனி கோவில் கட்டட்டும். அனுமானுக்கு ஒரு கோவில் கட்டட்டும். யார் வேண்டாமென்றார்கள்

வந்த வம்பே நானூறு ஆண்டுகளுக்கு முன்பு பாபரால் எழுப்பப்பட்ட பாபர் மசூதியை இடித்துவிட்டு அயோத்தியில் ராமனுக்கு கோவில் கட்டுவோம் என்றார்கள். அதற்கு வி.பி. சிங் ''அதை ஏற்க முடியாது. சிறுபான்மை மக்கள், இஸ்லாமிய மக்கள், அவர்களுடைய மார்க்கத்திற்கு எதிராக, மதத்திற்கு எதிராக மதச்சார்பற்ற அரசு நடத்துகிற நான் இதை அனுமதிக்க முடியாது'' என்று சொன்னார். அயோத்தியில் உங்களுக்கு இடம் தருகிறேன். இராமனுக்கு கோவில் கட்டிக் கொள்ளுங்கள் என்றார். இல்லை, இல்லை ராமன் இங்கேதான் பிறந்தான். இந்த இடத்திலே தான் பிறந்தான். இவ்வளவு அடி நீளம் இவ்வளவு அகலம் உள்ள அறையில் அந்த சதுர அடிக்குள் ராமன் பிறந்தான்.

நான் புராணம் படித்தவர்களை கேட்கிறேன். இராமன் பிறந்தானா? அவதரித்தானா? புராணீகர்ளுடைய கருத்துப் படி ராமன் பிறக்கவில்லை. ராமன் அவதரித்தான். ஏனென்றால் அவன் ஆண்டவன். அவன் பிறக்கமாட்டான், அவதாரம்தான் செய்வான். அவதாரம் செய்திருந்தால் அவதாரம் செய்தவனுக்கு அந்த ஆண்டவனுக்கு இப்படி ஒரு வம்பில் கோவில் தேவையில்லை. இல்லை ராமன் மனிதன் தான் என்றால் மனிதனுக்கு கோவிலே தேவையில்லை. இவர்களுடைய கணக்குப்படி ராமன் பிறந்த ஆண்டு எது?

இராமன் பிறந்தது திரேதாயுகம். நான் சொல்லவில்லை. மன்னை சொல்லவில்லை நாங்களெல்லாம் சொன்னால் சுயமரியாதைக்காரர்கள் சொல்கிறோம் என்று திட்டுவீர்கள். புராணமே சொல்கிறது. இராமன் பிறந்தது திரேதாயுகம். இராமனுக்குப் பிறகு கிருஷ்ணன் பிறக்கிறான். மகாவிஷ்ணு தான் இராமாவதாரம் எடுக்கிறார். அதே மகாவிஷ்ணுதான் கிருஷ்ணாவதாரம் எடுக்கிறார். இராமாவதாரம் எடுத்து ஏக பத்தினி விரதமாக இருக்கிறார். கிருஷ்ணாவதாரம் எடுத்து... சொல்லத்தேவையில்லை (பலத்த கைதட்டல்) ஆக திரேதா யுகத்தில் பிறந்த ராமன் அதற்குப் பிறகு கிருஷ்ணன் துவா பரயுகத்தில் பிறக்கிறான். யுகம் என்றால் புராணீகர் கணக்குப் படி எட்டு லட்சத்து அறுபத்தி நாலாயிரம் ஆண்டுகள் இராமன் பிறந்த யுகம் திரேதாயுகம், அதற்குப் பிறகு கிருஷ்ணன் பிறந்த யுகம் துவாபர யுகம். இரண்டு யுகங்களும் சேர்ந்து மொத்தம் பதினேழுலட்ச வருடங்களுக்கு மேலாகிறது. போனால் போகிறது என்று அதில் ஏழுலட்சம் ஆண்டைக் குறைத்து விடுவோம் பத்து லட்ச வருடத்திற்கு முன்பு இராமன் எங்கே பிறந்தான் என்று எவன் ஞாபகம் வைத்துக் கொண்டு இந்த இடத்தில்தான் பிறந்தான் என்று சொல் கிறார்கள் என்றால் இதைவிட அயோக்கியத்தனம் வேறு ஏதாவது நாட்டில் இருக்க முடியுமென்று கருதுகிறீர்களா? (பலத்த கைதட்டல்).

அங்கேதான் கோவில் கட்டுவதற்கு ரத யாத்திரை புறப் பட்டார். ரத யாத்திரையா அது, மத யாத்திரை (பலத்த கைதட்டல்) பாரதத்தில் வருகின்ற அர்ச்சுனனை போல ஒரு ரதம் கட்டிக்கொண்டு வில்லோடும், அம்போடும் அத்வானி புறப்பட்டார். நான் கேட்கிறேன் அயோத்திக்கு ரதம் போனதே அதைத் தடுத்து நிறுத்தினார். வி.பி. சிங் என்ப தற்காகத் தானே உங்கள் ஆதரவை வாபஸ் பெற்று காங்கிரஸ் ஆதரவோடு வேறொருவரை பிரதமராக ஆக்குகின்ற முயற்சி

நடைபெற்று வி.பி. சிங் வெளியேற்றப்பட்டிருக்கிறார். அந்த நபர் ஏன் மீண்டும் இப்போது அயோத்தியை நோக்கிச் செல்லவில்லை. ஆக உன்னுடைய குறிக்கோள் அயோத்தி அல்ல. பிற்படுத்தப்பட்ட சமுதாயத்திற்காக அமைக்கப்பட்ட மண்டல் குழுவின் பரிந்துரையை வி.பி. சிங் நிறைவேற்றத் தொடங்குகிறார். அவருக்கு எதிராக அவரை வீழ்த்த வேண்டு மென்பதுதான் உன்னுடைய குறிக்கோள். அதனால்தான் இப்பொழுது அயோத்தியை பற்றி நீ கவலைப்படவில்லை.

இப்பொழுது பத்திரிகைகளில் செய்தி வருகிறது. அத்வானி இந்தியா முழுவதும் சுற்றுப் பயணம் செய்யப் போகிறார் என்று செய்தி வருகிறது. அப்படியென்றால் இந்தியா முழுவதும் அயோத்தி இருக்கிறதா? இந்தியா முழுவதும் அயோத்தி இருப்பதாகச் சொன்னால் எங்கே யாவது ஓரிடத்தில் இராமர் கோவில் கட்டியிருக்கலாமே. அந்த அயோத்தியில்தான் கட்டுவேன் என்று ஏன் சொல்ல வேண்டும் ?

ஆக அயோத்தி அல்ல குறிக்கோள். அயோத்தி தான் குறிக்கோளாக இருந்திருக்குமேயானால் இராமருடைய கோவில்தான் அவர்களுடைய லட்சியமாக இருந்திருக்குமே யானால் ரத யாத்திரையை தொடர்ந்திருக்க வேண்டும். கைது செய்யப்பட்டார்கள் மீண்டும் விடப்பட்டார்கள். மறுபடியும் அங்கே செல்வோம் என்று சென்றிருக்கவேண்டும். அப்படிச் செல்லவில்லை. அயோத்தியை மறந்து விட்டார்கள் அப்பா ! வி பீ சிங் ஒழிந்தார். அதனால் மண்டல் கமிஷன் ஒழிந்தது என்று எண்ணிக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் அவர்களுக்கு நான் சொல்ல விரும்புகிறேன். பேரறிஞர் அண்ணா ஒரு முறை சொன்னார். அண்ணா மறைவதற்கு இரண்டு வாரத்திற்கு முன்பு - சென்னையில்

பேசிய ஒரு கூட்டத்தில் சொன்னார். 'இந்த உயிர் இருப்பது ஒன்றுதான். இது போகப் போவது ஒருமுறைதான் அது நல்ல காரியத்திற்காக போகட்டும்' என்று சொன்னார் எந்த நிகழ்ச்சி தெரியுமா? சென்னை ராஜ்ஜியத்திற்கு தமிழ்நாடு என்று பெயர் வைத்த நிகழ்ச்சியில் சொன்னார் சொல்லிவிட்டுச் சொன்னார். காங்கிரஸ்காரர்கள் அண்ணா துரையையும், அவருடைய கழகத்தையும் அழித்து விடலா மென்று கருதுகிறார்கள். ஆனால் அண்ணாதுரை ஆட்சி நடத்திய இந்த இரண்டு ஆண்டு காலத்தில் செய்திருக்கின்ற சாதனைகளை யாரும் அகற்ற முடியாது என்று அண்ணா சொன்னார்.

பின்னர் அண்ணா சொன்னார் எதை அகற்றுவீர்கள். நான் சென்னை ராஜ்ஜியம் என்ற பெயரைமாற்றி 'தமிழ் நாடு' என்று பெயர் வைத்திருக்கிறேன். தமிழ்நாட்டுப் பள்ளிக் கூடங்களில் இனிமேல் தமிழ் ஆங்கிலம் இரண்டுக்குத்தான் இடம். இந்திக்கு இடமில்லை என்று அறிவித்திருக்கிறேன். சுயமரியாதை திருமணங்கள் சட்டப்படி செல்லுபடியாகும் என்று தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறேன். இந்த மூன்றை யும் நீங்கள் திரும்பப் பெற்றுவிட்டு தமிழ்நாட்டு தெருவில் எந்த காங்கிரஸ்காரனாவது உலவ முடியுமா என்று கேட்டார் (பலத்த கைதட்டல்)

## மண்டல் குழு அறிக்கையை நிறைவேற்றியே தீரவேண்டும் !

இன்று மண்டல் கமிஷனிலும் அதைத்தான் நான் கேட்கி றேன். வி.பி. சிங் அவர்களால் அறிவிக்கப்பட்டு நிறை வேற்றுகின்ற கட்டத்தில் இன்றைக்கு உச்சநீதிமன்றத்தால் இடைக்கால தடைபெற்றிருக்கின்ற அந்த மண்டல் கமிஷன் நிரந்தர தடைபெற்றாலும் அதற்கேற்றவாறு அரசியல்

சட்டத்தைதிருத்து என்கின்ற புரட்சி தமிழகத்தில் இந்தியாவில் எங்கெங்கும் உருவாகும் என்று நான் எச்சரிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதை நிறைவேற்றியே தீர வேண்டும்.

இன்றைக்கு சிலபேர் நாங்கள் ஐம்பது சதவிகிதம் கேட்போம் என்று சொல்கிறார்கள். இருபத்தியேழு சதவிகிதத்திற்கே இந்தப் பாடு. இதில் ஐம்பது சதவிகிதம் கேட்பார்களாம். ஊரை ஏமாற்ற! அ.தி.மு-க. தலைவர்கள் சொல்கிறார்கள். அவர்களே தான் சொன்னார்கள். மண்டல் கமிஷனை கொண்டு வந்ததற்காக வி.பி. சிங் பதவி விலக வேண்டுமென்று சொன்னார்கள், எனவே இன்று வி.பி. சிங்கிற்கு கிடைத்திருப்பது வீழ்ச்சி அல்ல அவர் பெற்றுள்ள விழுப்புண். விழுப்புண் பெறுவதுதான் வீரனுக்கு அழகு, நம்முடைய சங்க இலக்கியங்கள் எல்லாம் அதைத்தான் சொல்கின்றன. அந்த விழுப்புண்ணைத்தான் இன்றைக்கு வி.பி. சிங் பெற்றிருக்கிறாரேயல்லாமல் அறவே வீழ்ந்து விடவில்லை. வீழமாட்டோம்.

ஏனென்றால் நாம் ஆட்சிக்காக, அதிகாரத்திற்காக பிறந்தவர்கள் அல்ல. அதற்காக தங்களை இயக்கத்திலே ஒப்படைத்துக் கொண்டவர்கள் அல்ல. அதற்காக பெரியாரின் பிள்ளைகளாக, அண்ணாவின் தம்பிகளாக ஆனவர்கள் அல்ல. நாம் கொள்கைக்காகத்தான். லட்சியத்திற்காகத் தான் இருக்கிறோம். அதே நிலையிலே கொள்கைக்காக, லட்சியத்திற்காக ஆட்சியை இழந்தாலும் கவலைப்பட மாட்டேன் என்று வி.பி. சிங் சென்னை கடற்கரை கூட்டத்திலே சொன்னார். கொஞ்சம் விட்டுக் கொடுத்து பாரதீய ஜனதாவோடு பேரம் பேசி, வாஜ்பாயிடத்திலே கெஞ்சி நீங்கள் தாராளமாக அயோத்திக்குச் செல்லலாம். பாபர்

மசூதியை இடிக்கலாம். பரவாயில்லை. அங்கே உங்கள் கோவிலை கட்டிக் கொள்ளலாம். என்னுடைய ஆட்சியை மாத்திரம் காப்பாற்றுங்கள். உங்களுடைய எண்பது பேரின் ஆதரவு இருந்தால் என்னை யாரும் அசைக்க முடியாதென்று சொல்லியிருந்தால் அவர் இன்றைக்கு பிரதமராக இருந்திருப்பார். பிரதமராகத்தான் இருப்பார். ஆனால் ஒரு கொள்கை வீரனாக இருந்திருக்க மாட்டார். இன்றைக்கு கொள்கை வீரராக இருக்கிறார். பிரதமராக இல்லை. நாளைக்கு மீண்டும் பிரதமராக வரலாம். வராமல் போகலாம். ஆனால் சரித்திரம் உள்ளவரை அவர் சாக மாட்டார்.

நாம் அவரை விரும்புவதற்குக் காரணம் நாமும் கொள்கைக்காக பதவியை இழக்கத் தயாராக இருந்தவர்கள். எமர்ஜென்சி காலத்தில் இந்திரா காந்தியிடம் கொஞ்சம் கெஞ்சியிருந்தால் நாங்கள் அதை ஆதரிக்கிறோம் என்று சொல்லியிருந்தால் அல்லது ஆள் அனுப்பினார்களே எமர்ஜென்சியை எதிர்த்து நீங்கள் போட்ட தீர்மானத்தை வாபஸ் பெற்றுக் கொள் இன்னும் ஓராண்டு காலம் ஆட்சியை நீட்டிக்கிறேன்என்றுஇந்திராகாந்திஆள் அனுப்பினாரே அப்பொழுது, சரி என்று ஒத்துக் கொண்டிருந்தால் அன்றைக்கு ஆட்சியை இழந்திருக்கத் தேவையில்லை. அண்ணா எங்களுக்கு கற்றுத் தந்த ஜனநாயகக் கொள்கைதான் முக்கியம். ஆட்சி பெரிதல்ல என்று சொன்னோம். அன்றைக்கும் சொன்னோம். இன்றைக்கும் சொல்கிறோம். என்றைக்கும் சொல்வோம். கொள்கைதான் பெரிது. ஆட்சி அல்ல. ஆட்சி வரும், போகும். நீங்களும், நானும் என்றைக்கும் இருப்போம். இறந்தாலும் மக்களுடைய மனதிலே வாழ்வோம். அதுதான் வாழ்க்கை!

இவ்வாறு முதல்வர் கலைஞர் அவர்கள் உரையாற்றினார்.

அறக்கட்டளை

மொத்த ஜனத் தொகையில் 10 பேர் கூட இல்லாத உயர்சாதி மக்களுக்கு 1379 பதவிகள், 80 சதவீதத்திற்கும் மேற்பட்ட பிற்படுத்தப்பட்ட — தாழ்த்தப்பட்ட மக்களுக்கு 48+9=57 பதவிகள்! இந்த அக்கிரமத்தை — அயோக்கியத் தனத்தை அகற்றி — சமூக நீதியை நிலை நாட்ட மண்டல் பரிந்துரைகள் அமுல் நடத்த முன் வந்தார் வி. பி. சிங்!

| மத்திய அரசு துறைகள் | மொத்தப் பதவிகள் | உயர் வகுப் பினர் | தாழ்த்தப் பட்ட வகு ப்பினர் | பிற்படுத் தப்பட்ட வகுப்பினர் |
|---|---|---|---|---|
| பாதுகாப்புத் துறை | | | | |
| கிளாஸ் I அதிகாரிகள் | 1,379 | 1,322 | 48 | 9 |
| கிளாஸ் II அதிகாரிகள் | 7,752 | 6,762 | 803 | 187 |
| கிளாஸ் III & IV | 2,127 | 1,392 | 604 | 131 |
| | 11,258 | 9,476 | 1,455 | 327 |
| நிதித்துறை | | | | |
| கிளாஸ் I | 1,008 | 941 | 66 | 1 |
| கிளாஸ் II | 2,824 | 2,507 | 306 | 11 |
| கிளாஸ் III & IV | 821 | 606 | 202 | 13 |
| செய்தித்துறை | 16,505 | 11,498 | 3,660 | 1,347 |
| திட்டத்துறை | 5,917 | 4,582 | 977 | 358 |
| சுற்றுலா மற்றும் விமானப் போக்கு வரத்து துறை | 9,185 | 7,463 | 1,181 | 541 |
| குடியரசுத் தலைவர் அலுவலகம் | 307 | 260 | 47 | 0 |

வி. பி. சிங் ஆட்சி கவிழ்க்கப்பட்டதின் காரணம், மறவாதீர்!

